பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை - 4

03 01 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இலக்கியமும், இதழியலும் ஜனநாயகத்தின் தூண்கள் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. புத்த பெருமானின் புனித சின்னங்கள் குறித்த சர்வதேச கண்காட்சியை பிரதமர் திரு.நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

3. மத்திய மாநில அரசு திட்டங்களை சரியான நேரத்தில் அமல்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மேற்குவங்கத்தில், வாக்காளர் பட்டியலில் போலியான பெயர்களை சேர்த்ததாக, பணியிடை நீக்கம் செய்யப்பட்ட மாநில அரசின் ஐந்து அதிகாரிகள் மீது, முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

5. ஆடவர் ஹாக்கி இந்தியா லீக் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

இலக்கியமும், இதழியலும் ஜனநாயகத்தின் தூண்கள் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று ராம்நாத் கோயங்கா இலக்கிய விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசிய அவர், நேர்மை, துணிவு, ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை நிலைநாட்டியவர் மறைந்த பத்திரிகையாளர் ராம்நாத் கோயங்கா என்று புகழாரம் சூட்டினார்.

இந்திய ஜனநாயகத்தின் மனசாட்சி பாதுகாவலராக திகழ்ந்த அவரது மரபு, இன்றும் தலைமுறைகளை ஊக்கவிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் அமல்படுத்தப்பட்ட அவசர நிலையின் போது, பத்திரிகை தணிக்கையை எதிர்த்து, ராம்நாத் கோயங்கா வெளியிட்ட புகழ்பெற்ற வெற்றுத் தலையங்கம், மௌனத்தின் வலிமையையும், இதழியலின் அறச்சீற்றத்தையும் உலகிற்கு எடுத்துக்காட்டிய வரலாற்றுச் சான்று என்றும் அவர் கூறினார்.

தேசிய வளர்ச்சிக்கான விவாதங்களுக்கு ஊடகங்கள் அதிக இடமளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய விழிப்புணர்வு மற்றும் தகவல் அறிந்த குடிமக்களை உருவாக்குவதற்கான ஆக்கபூர்வமான விவாதங்களுக்கு நாளிதழ்கள் வழிவகுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மத்திய கலாச்சார அமைச்சகத்தின் ஞானபாரதம் திட்டத்தின் மூலம், நாட்டின் பண்டைய ஏட்டுச் சுவடிகள் மற்றும் அறிவுச் செல்வங்களை செயற்கை நுண்ணறிவு

போன்ற நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பாதுகாக்கும் முயற்சியையும் அவர் பாராட்டினார்.

முன்னதாக, இலக்கியத் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கியவர்களுக்கு விருதுகளை திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

>>>>><<<<<

புத்த பெருமானின் புனித சின்னங்கள் குறித்த சர்வதேச கண்காட்சியை பிரதமர் திரு.நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

1898ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட புனித சின்னங்கள், ஆரம்பகால பௌத்த மதம் குறித்த தொல்பொருள் ஆய்வுகளில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன.

புத்தரின் வாழ்வியல் மற்றும் போதனைகளை எடுத்துரைக்கும் விதமாக, இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பௌத்த மரபுகளை பாதுகாப்பதிலும், அதனை உலக அளவில் கொண்டு செல்வதிலும் இந்த கண்காட்சி ஒரு முக்கிய மைல் கல்லாக இருக்கும் என்று பிரதமர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று அந்தமான் நிகோபார் தீவுகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இரண்டு நாள் பயணமாக இன்று காலை, போர்ட் ப்ளேர் சென்ற அவரை விமான நிலையத்தில் அந்தமான் துணைநிலை ஆளுநர் அட்மிரல் D.K. ஜோஷி மற்றும் தலைமைச்செயலாளர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இன்று காலை மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனைக் குழுக் கூட்டம் திரு. அமித் ஷா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர்.

உள்துறை அமைச்சகத்தின் கொள்கைகள், உள்நாட்டு பாதுகாப்பு, எல்லை நிர்வாகம், இணையதள குற்றங்கள், குற்றவியல் நீதி சீர்திருத்தங்கள் தொடர்பாக இதில் விரிவாக ஆலோசிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்குப் பிறகு, ஸ்ரீவிஜயபுரத்தில் நவீன நீதிச்சட்டம் குறித்த கண்காட்சியை திரு. அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.

பின்னர் அங்கு நடைபெறும் விழாவில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதோடு, முடிவடைந்த திட்டங்களை அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

>>>>><<<<<

மத்திய மாநில அரசு திட்டங்களை சரியான நேரத்தில் அமல்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நேரடி கண்காணிப்பில், 85 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள், அவ்வப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சரவை செயலாளர் திரு. டி.வி. சோமநாதன் கூறினார்.

இதுவரை பிரதமர் தலைமையில், 50 ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளதாகவும், அதில் 3 ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்டமைப்பு திட்டங்கள் மட்டுமல்லாமல், ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை, பிரதமரின் ஆரோக்கிய திட்டம் உள்ளிட்ட 61 முக்கியமான அரசு திட்டங்களும் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

2015ஆம் ஆண்டு முதல் பெருந்தொற்று தொடர்பான சிக்கல்கள் மற்றும் வங்கி, காப்பீடு, அனைவருக்கும் வங்கிக் கணக்குத் திட்டம் உள்ளிட்ட 35 திட்டங்களின் கீழ், பொதுமக்களின் குறைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. டி.வி. சோமநாதன் தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தில், வாக்காளர் பட்டியலில் போலியான பெயர்களை சட்டவிரோதமாக சேர்த்ததாக குற்றம் சாட்டப்பட்டு, பணியிடை நீக்கம் செய்யப்பட்ட மாநில அரசின் ஐந்து அதிகாரிகள் மீது, முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய தேர்தல் ஆணையம் மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின் போது, இல்லாத நபர்களின் பெயர்களையும், போலியான பெயர்களையும் பட்டியலில் சேர்த்ததாக 5 அதிகாரிகளை பணியிடை நீக்கம் செய்யப்பட்ட போதிலும், அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை இதுவரை பதிவு செய்யப்படாமல் இருந்தது.

இதையடுத்து தேர்தல் ஆணையம் தாமாக முன்வந்து, இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு நேரடியாக உத்தரவு பிறப்பித்துள்ளது.

>>>>><<<<<

சவுதி அரேபியாவுக்கு செல்லும் இந்தியர்கள், தங்களது மருந்து பொருட்களை எடுத்துச் செல்வதற்கு முன்பு, தேவையான அனுமதியை பெறுமாறு, மத்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

சவுதி அரேபியாவுக்கு செல்லும் அல்லது அங்கிருந்து வெளியேறும் நபர்கள் தங்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக எடுத்துச் செல்லும் மருந்துகளுக்கு

முன்அனுமதி பெற அந்நாடு, புதிய மின்னணு சேவை தளத்தை அறிமுகப்படுத்தியதை அடுத்து, இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அல்லது பிற நாடுகளில் சட்டபூர்வமாக புழக்கத்தில் இருக்கும் சில மருந்துகள், சவுதி அரேபியாவில் தடை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதால், கவனமாக இருக்குமாறு பயணிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மருத்துவர் பரிந்துரைத்த அளவை விட அதிகமாக மருந்துகளை எடுத்துச் செல்வது சட்டபூர்வ நடவடிக்கைளுக்கு வழிவகுக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பயணத்தை மேற்கொள்ளும் முன்பு, சவுதி அரேபிய அதிகாரிகளால் வெளியிடப்பட்ட தடை செய்யப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகளின் அதிகாரப்பூர்வ பட்டியலை சரிபார்க்குமாறும் பயணிகளை போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் மாசடைந்த குடிநீர் தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், உயரதிகாரிகளுடன் நேற்று ஆய்வு நடத்தினார்.

தண்ணீர் மாசடைந்து, பொதுமக்கள் பாதிக்கப்பட்டது குறித்து இந்தூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் கூடுதல் ஆணையம் விளக்கமளிக்க மாநில அரசு சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

கூடுதல் ஆணையரை இந்தூரிலிருந்து பணியிட மாற்றம் செய்யவும், குடிநீர் விநியோக பணிகளுக்கு பொறுப்பான கண்காணிப்பு பொறியாளரை அந்த பொறுப்பிலிருந்து விடுவிக்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தூர் சம்பவத்தை தொடர்ந்து, மாநிலத்தின் பிற பகுதிகளிலும் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, இந்தூரின் பாஹித்புரா பகுதியில், மாசடைந்த குடிநீர் விவகாரம் தொடர்பாக, மத்தியப்பிரதேச மாநில உயர்நீதிமன்றத்தின் இந்தூர் கிளையில் மாநில அரசு நேற்று நிலவர அறிக்கையை தாக்கல் செய்தது.

இந்த அறிக்கை மீதான விரிவான விசாரணையை வரும் 6ஆம் தேதிக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

>>>>><<<<<

ஈரானில் தற்போதுள்ள அரசுக்கு எதிராக போராடி வரும் பொதுமக்கள் மீது, வன்முறையை அரசு ஏவினால், அமெரிக்கா தலையிடும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், ஈரான் தயாரிக்கு வரும் ஆயுதங்கள் மற்றும் வெனிசுலாவுக்கு ஈரான் அளித்துள்ள ட்ரோன் தொடர்புடைய விஷயத்தில் அமெரிக்கா கடுமையாக நடந்து கொள்ளும் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு எதிராக கடந்த ஒரு வாரமாக ஈரானில் நடைபெற்று வரும் போராட்டத்தின் போது, பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

ஆடவர் ஹாக்கி இந்தியா லீக் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தமிழக அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

ராஞ்சியில் நடைபெறவுள்ள மகளிர் பிரிவு ஆட்டத்தில், தில்லி - சூர்மா அணிகள் மோதுகின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ராஞ்சி அணி 2-0 என்ற கோல்கணக்கில் சூர்மா அணியை வென்றது.

>>>>><<<<<

அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி இன்று ஜப்பானின் Kavamura-வை எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல்ஆட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு, Benoni-யில் தொடங்குகிறது.

>>>>><<<<<

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் சார்பில், திருச்சி மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று பெரம்பலூரில் தொடங்குகிறது.

>>>>>END<<<<<